

திருப்பூர் பூங்கா சாலையில் அமைந்துள்ள கே.எஸ்.ஆர். திருமண மண்டபத்தில் தன் வாழ்க்கையை சமூகப் புரட்சிக்காகவே ஒப்படைத்து, திராவிட சித்தாந்த பலத்தோடு சமூக நலத்திட்டங்களின் வழி நம்மை முன்னோக்கி நகர்த்திட்ட ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சாதனைகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சியை திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில், மாநகரக் கழகச் செயலாளர்கள் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், இல.பத்மநாபன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் சென்னிமலை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சி.பிரபு, வட்டக் கழக செயலாளர் நேதாஜி கண்ணன் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மருத்துவத் துறையில்

# தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது!

## தருமபுரி மாவட்டம் - அரூரில், பொது சுகாதாரத்துறையில் முடிவுற்ற பல்வேறு திட்டப்பணிகளைத் திறந்து வைத்து - அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதம்!

தருமபுரி, டிச.21-

தருமபுரி மாவட்டம் - அரூரில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவத் துறை சார்பில் முடிவுற்ற பல்வேறு திட்டப் பணிகளைத் திறந்து வைத்தும், புதுப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் பேசிய மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், "மருத்துவத் துறையில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழுகிறது!" என்று குறிப்பிட்டார்.


தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கீரைப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் சார்பில் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் ரூ.1.13 கோடி மதிப்பீட்டில் 4 முடிவுற்ற புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்கள் மற்றும் புதிய செவிலியர் குடியிருப்பு கட்டத்தினை திறந்து வைத்தும், ரூ.2.53 கோடி மதிப்பீட்டில் 2 புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்கள், ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் மற்றும் வட்டார பொது சுகாதார அலகு கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்தும், பல்வேறு துறைகளின் சார்பில் 642 பயனாளிகளுக்கு ரூ. 3.71 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை நேற்று முன்தினம் (19.12.2023) வழங்கினார்கள். இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி தலைமை வகித்தார்.

தருமபுரி மாவட்டத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் அரூர் வட்டம், வேப்பம்பட்டியில் 15வது நிதிக்குழு நிதியின் கீழ் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு துணை சுகாதார நிலைய கட்டடம், பாலக்கோடு வட்டம், எண்டப்பட்டியில் 15 வது நிதிக்குழு நிதியின் கீழ் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு துணை சுகாதார நிலைய கட்டடம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், எச்.புதுப்பட்டியில் 15வது நிதிக்குழு நிதியின் கீழ் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு துணை சுகாதார நிலைய கட்டடம், கீரைப்பட்டியில் NHM நிதிக்குழு நிதியின் கீழ் ரூ.22.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஆரம்ப சுகாதார நிலைய செவிலியர் குடியிருப்பு கட்டடம் என மொத்தம் ரூ.1.13 கோடி மதிப்பீட்டில் 4 முடிவுற்ற புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்கள் மற்றும் புதிய செவிலியர் குடியிருப்பு கட்டடங்கள் அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், மா.சுப்பிரமணியன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

மேலும், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் பி.பள்ளிப்பட்டியில் 15வது நிதிக்குழு நிதியின் கீழ் ரூ.34.35 இலட்சம் மதிப்பீட்டில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம், அரூர் வட்டம் கொங்கவேம்பில் 15வது நிதிக்குழு நிதியின் கீழ் ரூ.34.35 இலட்சம் மதிப்பீட்டில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம், பென்னாகரம் வட்டம் நாக தாசம்பட்டியில் 15வது நிதிக்குழு நிதியின் கீழ் ரூ.124.50 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் மற்றும் நல்லம்பள்ளி வட்டம் பாளையம்புதூரில் 15வது நிதிக்குழு நிதியின் கீழ் ரூ.59.45 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு கட்டடம் என மொத்தம் ரூ.2.53 கோடி மதிப்பீட்டில் 2 புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்கள், ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் மற்றும் வட்டார பொது சுகாதார அலகு கட்டடத்திற்கு அமைச்ச ர்கள் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று அடிக்கல் நாட்டி வைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்து, வருவாய்த்துறையின் சார்பில் 385 பயனாளிகளுக்கு ரூ.1.82 கோடி மதிப்பீட்டில் இலவச வீட்டுமனை பட்டாக்கள், இணைய வழி பட்டாக்கள், பட்டா மாறுதல் ஆணைகள், முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, திருமண உதவித்தொகை, விதவை உதவித்தொகை, இயற்கை மரண உதவித்தொகை உள்ளிட்ட சமூக பாதுகாப்பு திட்ட உதவித்தொகைகளையும், வேளாண்மைத்துறையின் சார்பில் 10 விவசாயிகளுக்கு ரூ.47,900/ மதிப்பீட்டில் இடு பொருட்களான பல்வேறு விதைகள், தென்னங்கன்றுகள், திரவ உயிரி உரங்களையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 4 விவசாயிகளுக்கு ரூ.2.47 இலட்சம் மதிப்பீட்டில் சொட்டுநீர் பாசனம், மா மற்றும் தக்காளி பரப்பு விரிவாக்கம் உதவித்தொகைகளையும்,

ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் 34 பயனாளிகளுக்கு



ரூ.57.00 இலட்சம் மதிப்பீட்டில் தாட்கோ மானிய கடன்கள், மகளிர் சுய உதவிக்குழு கடன்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் அட்டைகள், வட்டார வள வணிக கடன் உதவிகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 7 பயனாளிகளுக்கு ரூ.7.35 இலட்சம் மதிப்பீட்டில் பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகளையும், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் 196 பயனாளிகளுக்கு ரூ.1.03 கோடி மதிப்பீட்டில் மரு.முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் ஊட்டசத்து பெட்டகம், மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து பெட்டகம், கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ் கண்ணாடிகள் மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் மருத்துவகாப்பீட்டு அட்டைகள், கர்நாடகா மாநிலம் பெங்களூரில் ஏற்பட்ட பட்டாசு வெடி விபத்தில் உயிரிழந்த தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேட்டகட்டமடுவு, டி.அம்மாபேட்டை பகுதியைச் சார்ந்த 6 நபர்களின் குடும்பத்தாருக்கு தாட்கோ மூலம் தலா ரூ.3.00 இலட்சம் வீதம் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் கறவை மாட்டுப் பண்ணை அமைப்பதற்கான கடன் உதவிகள் என மொத்தம் 642 பயனாளிகளுக்கு ரூ. 3.71 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், மா.சுப்பிரமணியன் ஆகியோர் வழங்கினார்கள்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு**

இதனை தொடர்ந்து, அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி, பொது மக்கள் எவ்வித சிரமமுமின்றி மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக புதிய தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவ கட்டமைப்புகள் தொடர்ந்து உருவாக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டு வருகிறது. நேற்றைய தினம் சேலம் மாவட்டத்தில் மருத்துவமனைகளுக்கு பல்வேறு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டும், மருத்துவ கட்டடங்கள் திறந்தும் வைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், தருமபுரி மாவட்டத்தில் இன்றைய தினம் ரூ.112.75 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடங்கள் செவிலியர் குடியிருப்பு கட்டடம் என 4 புதிய கட்டிடங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

மேலும், ரூ.2.53 கோடி மதிப்பீட்டில் 2 புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்கள், ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் மற்றும் வட்டார பொது சுகாதார அலகு கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மாவட்டங்களிலும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மருத்துவ கட்டமைப்புகளை உருவாக்கி, திறந்து வைக்க உள்ளோம். ஏற்கனவே தருமபுரி மாவட்டத்தில் கடந்த காலங்களில் 14 ஆரம்ப சுகாதார நிலையங்களில், புற நோயாளிகள் பிரிவு கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதோடு, ரூ.11.20 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கட்டடங்களும், மருத்துவ உபகரணங்களும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மாவட்ட வருவாய் அலுவலர் பால்பிரின்ஸ்லி ராஜ்குமார், முன்னாள் அமைச்சர் முனைவர்.பழனியப்பன், தடங்கம் பெ.சுப்பிரமணி, இணை இயக்குநர் (மருத்துவம்) மரு.ம.சாந்தி, மரு.ஆர். கே.ஜெயந்தி, வில்சன் ராஜசேகர், மாவட்ட மாற்றுதிறனாளிகள் நல அலுவலர் திருமதி. செண்பகவள்ளி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜி.சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மனோகரன், திருமதி. வேடம்மாள், வட்டாட்சியர் திருமதி.கனிமொழி, ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் ஜி.பெருமாள், கீரைப்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.அமுதா சங்கர். உட்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், தொடர்புடைய அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப்பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.



நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் இனமானப் பேராசிரியர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருஉருவப் படத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து , மலர் தூவி மரியாதை செய்தனர். உடன் நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இலக்கிய அணி இரா.முருகையன், விவசாய அணி எஸ்.பால்ராஜ், வர்த்தக அணி குலோத்துங்கன், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் இரா.தங்கதுரை, எஸ்.செல்வா, நிஜாம், நாகை நகரக் கழக நிர்வாகிகள் வெற்றிலை கடைசிவா, பி.திலகர், அபுபக்கர் மற்றும் எஸ்.எம்.ஏ. கணேசன், அய்யாவு கணேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமை!

# ஆலத்தூர் ஒன்றியப் பெருந்தலைவர் என். கிருஷ்ணமூர்த்தி 79 வது பிறந்தநாள்!

## அமைச்சர் கே.என்.நேரு - ஆ.இராசா எம்.பி. - தொல்.திருமாவளவன் வாழ்த்து!

பெரம்பலூர், டிச.21-

ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும், ஆலத்தூர் ஒன்றிய பெருந்தலைவருமான என்.கிருஷ்ணமூர்த்தி 79 வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும், ஆலத்தூர் ஒன்றிய பெருந்தலைவருமான என். கிருஷ்ணமூர்த்தி தனது குடும்பத்தினர் மற்றும் கட்சியினருடன் சேர்ந்து பிறந்த நாள் கேக் வெட்டினார். நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஆ.இராசா.எம்.பி., தொல். திருமாவளவன் எம்.பி., ஆகியோர் தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தனர். போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொளக்காநத்தம் கிராமத்திற்கு நேரில் வந்து வாழ்த்து தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து கட்சியினர், தொழிலதிபர்கள், முக்கிய பிரமுகர்கள், இளைஞர்கள் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் சால்வை அணிவித்து, பூங்கொத்து, பரிசு பொருட்கள் வழங்கி வாழ்த்து தெரிவித்தனர். இந்நிகழ்வில் திருச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் காடுவெட்டி ந.தியாக ராஜன்,எம்.எல்.ஏ, திருச்சி மத்திய மாவட்ட கழக செயலாளர் வைரமணி, துறையூர் எம்.எல்.ஏ. .ஸ்டாலின் குமார், பெரம்பலூர் ரோவர் கல்வி நிறுவனங்களின் சேர்மன் வரதராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.இராஜேந்திரன், திருச்சி மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் தர்மன் ராஜேந்திரன், மாவட்டக் கழகச் துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், ஒன்றிய கழக செயலாளர்கள் எம். ராஜ்குமார், தி.மதியழகன், பெரம்பலூர் ஒன்றிய பெருந்தலைவர் மீனா அண்ணாதுரை, வேப்பூர் ஒன்றிய பெருந்தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கார்மேகம், ஊராட்சி மன்ற தலைவர்கள் ந.ராகவன், பாலமுருகன், அகிலா ராமசாமி, அன்புச்செல்வன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் மதியழகன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வ. சுப்ரமணியன், ஒன்றிய கவுன்சிலர்கள் இளவரசு, சத்யா சாமிதுரை, கிளைக் கழக செயலாளர் ராஜேந்திரன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணியின் ஒருங்கிணைப்பாளர் சக்திவேல், இளைஞரணி பிரபு, பகுதி மாணவரணி துணை அமைப்பாளர் நந்தகுமார், ஒப்பந்ததாரர்கள் அமர்நாத், வெங்கடேசன்,மற்றும் மாவட்ட, நகர, பேரூர் ஒன்றிய நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள், தொண்டர்கள் உள்பட கட்சியின் முன்னனி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை- அன்னவாசலில்

# 2,225 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் வழங்கினர்!

புதுக்கோட்டை டிச. 21

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், 2,225 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 19.12.2023 அன்று வழங்கினார்.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகளின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் மாணவ, மாணவிகள் பள்ளிக்கு உரிய நேரத்திற்குள் சென்றுவரும் வகையில் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி வருகிறார்கள். அதன்படி இன்றையதினம் 2,225 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது. அதன்படி அன்ன வாசல் ஊராட்சி ஒன்றியம், வயலோகம் அரசினர் மேல்நிலைப்பள்ளியில், வயலோகம், பரம்பூர், முக்கணாமலைப்பட்டி பள்ளிகளைச் சேர்ந்த 232 மாணவர்களுக்கும், 247 மாணவிகளுக்கும், அன்னவாசல் அரசு மேல்நிலைப்பள்ளியில் அன்னவாசல், இலுப்பூர், கீழக்குறிச்சி, மண்ணவேளாம்பட்டி, இராப்பூசல், மருதாந்தலை பள்ளிகளைச் சேர்ந்த 339 மாணவர்களுக்கும், 549 மாணவிகளுக்கும் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், காரையூர் அரசு மேல்நிலைப்பள்ளியில், காரையூர், மேலத்தானியம், சடையம்பட்டி, நகரப்பட்டி பள்ளிகளைச் சேர்ந்த 172 மாணவர்களுக்கும், 179 மாணவிகளுக்கும், பொன். புதுப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் பொன். புதுப்பட்டி, பொன்னமராவதி, ஆலவயல் பள்ளிகளைச் சேர்ந்த 132 மாணவர்களுக்கும், 254 மாணவிகளுக் கும், மேலைசிவபுரி அரசு மேல்நிலைப்பள்ளியில் மேலைசிவபுரி பள்ளியினைச் சேர்ந்த 64 மாணவர்களுக்கும், 57 மாணவிகளுக்கும் என ஆகமொத்தம் 2,225 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

மேலும் தமிழக அரசின் மூலம் வழங்கப்பட்டுள்ள இந்த மிதிவண்டிகளை மாணவ, மாணவிகள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் மாணவ, மாணவிகள் மிதிவண்டியினை நாள்தோறும் பயன்படுத்துவதன் மூலம் தங்களுக்கு உடற்பயிற்சியாகவும் அமைகிறது என எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

பின்னர் பொன்னமராவதி வட்டாரம், காரையூரில், நபார்டு திட்டத்தின்கீழ், ரூ.39.55 இலட்சம் மதிப்பீட்டில், விதை சேமிப்புக் கிடங்குடன் கூடிய துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. இதன்மூலம் இப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு தேவையான விதைகள் மற்றும் இடுப்பொருட்கள் இருப்பு வைத்து வழங்கவும் வழிவகை ஏற்பட்டுள்ளது. இம்மையத்தின் மூலம் இப்பகுதியில் உள்ள விவசாய குடும்பங்கள் பயன் பெறும்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எம்.மஞ்சுளா, மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில், இணை இயக்குநர் (வேளாண்மை) பெரியசாமி, (வேளாண் பொறியியல்துறை) செல்வம், சடையப்பட்டி பெற்றோர் ஆசிரி தலைவர் அ.முத்து, பள்ளித்துணை ஆய்வாளர் வேலுச்சாமி, கே.எஸ்.சந்திரன், சு.சண்முகம். அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மிசா பி. தம்பித்துரை**

**டிசம்பர் 21 (1990)**



"நெல்லை இரட்டையர்கள்" என்று அழைக்கப்பட்ட இரட்டையர்களில் இவரும் ஒருவர்.

கழகத்தில் தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளை வகித்தவர்.

கண்டிகைபேரி ஊராட்சி மன்றத் தலைவராகவும் – மானூர் ஒன்றியப் பெருந்தலைவராகவும் – திருநெல்வேலி நகராட்சி உறுப்பினராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**